IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# THE SOCIOPOLITICAL BACKGROUND OF MANIMEGALAI
# மணிமேகலை கட்டமைக்கும் சமூக அரசியல் பின்னணி

**Dr S. Saravanajothi**
**முனைவர் சீ. சரவணஜோதி**[1]
Assistant Professor in Tamil, Thiagarajar College, Madurai, Tamilnadu, India.

***Abstract….****The major objective of the research is to explore the Buddhist ideas in manimegalai with sociopolitical background. This research is designed in a qualitative approach. Library work method is used for this study. The findings shows that the Buddhist religious ideas through Manimagalai. This Epic illustrating the Buddhist ideas, the social politics of King, the social relationship of the monarch, the politics of religious affiliation, through Manimegalai, Udayakumaran and other Characters. This way provides an opportunity to understand the religious politics of contemporary times. Buddhism has established itself in the society. The researcher confirms that this is the first article examining social politics through the character of Manimagalai in this Epic.*

***Keywords…****Manimegalai, Udayakumaran, Religious politics, Buddhism, Social politics, Epic.*

***ஆய்வுச்சாரம்…*** இவ்வாய்வின் முதன்மை நோக்கம், மணிமேகலை காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பௌத்தமதக் கருத்துக்கள், பௌத்த மதத்திற்கானச் சமூக அங்கிகாரங்களை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு நூலாய்வு அணுகுமுறையினை முதன்மையாகக் கொண்டு கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் மணிமேகலைக் காப்பியத்தில் வரும் பௌத்த மதக் கருத்துக்கள், பௌத்தமதக் கருத்துக்களை எடுத்துரைக்கும் மணிமேகலை காதாப்பாத்திரத்தின் எடுத்துரைப்பியல், நூலாசிரியர் கண்ட மன்னர் சமூக அரசியல், உதயகுமாரன் கதாப்பாத்திரத்தின் மூலம் மன்னர் சமூக உறவு, மத அங்கிகாரத்திற்கான சமயங்களின் அரசியல், பௌத்தம் தன்னை சமூகத்தில் நிலை நிறுத்திக்கொண்ட பாங்கு ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாய்வின் வழி சமகால சமயங்களின் அரசியலைப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பக அமைந்துள்ளது. இவ்வாய்வு மணிமேகலை காப்பியத்தில் உள்ள, கதாப்பாத்திரங்களின் எடுத்துரைப்பியலில் சமூக அரசியலை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கிறார்.

***கருச்சொற்கள்….*** மணிமேகலை, உதயகுமாரன், சமய அரசியல், பௌத்தம், சமூக அரசியல், காப்பியம்.

## *அறிமுகம்*

தமிழ் இலக்கியங்கள் திணைச் சமூகத்தை முன்னிருத்தி தொடங்குகிறது. திணை இலக்கியங்கள் சூழலியல் சார்ந்த வாழ்வியல் அற கோட்பாட்டை முன்வைத்தன. “திணைச் சமூகத்திற்குப் பின்னால் தோன்றிய அற இலக்கியச் சமூகத்தில், திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு போன்ற நூல்கள் ஒழுக்கவியல் கோட்பாட்டினை வினையினை உட்கூறுகளாக பிறித்து வரையறை செய்கின்றன. திருக்குறளில், வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை என்ற மூன்று அதிகாரங்கள் வழி வினையின் ஒழுக்கவியல் மறுகட்டமைப்பு

செய்யப்படுகிறது" (saravanajothi, (2020) Construction of ethics in Cirupancamulam, p.886). பண்டைத்தமிழ்ச் சூழ்லில் 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' (*புறநானூறு*, 2010 – பாடல் 186, மோசிகீரனார்.) என்ற சமூக அமைப்பு பிறகாலத்தில் வாணிகர்களின் கையில் உட்புகுந்ததைச் சிலப்பதிகாரம் வழக்குரைத்த காதையின் மூலம் காணமுடியும். சிலம்பின் காப்பியத் தலைவி வணிகர் குலப் பெண் கண்ணகி மன்னனைப் பார்த்து 'நுண்ணறிவற்றவனே' (தேரா மன்னா செப்புவது உடையேன், *சிலப்பதிகாரம்*, 1920, வழ்க்குரைத்த காதை பாடல் வரி -50.) என்று, விளித்துப் பேசுகிறார். இது வாணிகர் குலத்தின் மேலாதிக்கத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. வாணிகர் சமூகத்திற்கும் அரசர் சமூகத்திற்கும் இத்தகைய நெருங்கிய உறவு எப்படி உருவானது என்பதை, வி.கனகசபை 'வாணிகரின் சாத்துக்கள் நகருக்கு நகர் படை வீரரின் பாதுகாப்புடன் பயணம் செய்தனர். உள்நாட்டிலுள்ள முக்கிய வாணிகக் களங்கள் மன்னனின் படை வீரர்களால் காவல் செய்யப்பட்டு வந்தன'(*ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்*, 1962., ப.194) என்கிறார். இவ்வகையில் வாணிகர் சமூகம் அரசர் சமூகத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உறவு புலப்படுவதை அறிய முடிகிறது.

தொல்காப்பியர் சமூகப் பிரிவினரை வகைப்படுத்தும் போது 'பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர், அறிவர், வீரர்' (*தொல்காப்பியம், பொருளதிகாரம்* சூத்திரம் 1021, பக்.388-389.) என்று சுட்டுகிறார். இதனை வி.கனகசபை 'முதல் வகுப்பு அறிவர் வகுப்பே. ஆனால், இவர்கள் தொகையில் மிகக் குறைவானவர்களே' (*ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்*, 1962., ப.202.) என்கிறார். இவ்விடத்தில் தொல்காப்பியர் வேறுபடுவதைச் சுட்டிகாட்டி இவர் ஓர் 'ஆரிய பார்ப்பனர்' (*ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்*, 1962., ப.205.) என்கிறார். மேலும், 'பார்ப்பனர் சமூகம் ஆடல் நங்கையருடன் கூத்தியருடனும் ஊடாடத் தயங்கவில்லை' (*ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்*, 1962., ப.199) என்று கூறுகிறார். *கலித்தொகை*, (2010), பா.72 இல் பார்ப்பணர் குறித்த கருத்து இடம்பெற்றுள்ளது. ஆகையால், இதற்கு அடுத்த நிலையில் இருந்த வாணிகச் சமூகம், சமூக அமைப்பில் மேல் நிலையாக்கம் அடைந்தனர் எனலாம். இதற்கு அடுத்த நிலையில் இருந்த வாணிகச் சமூகம் தனது சமயத்தை நிலைநிறுத்துவதற்கு முயற்சி செய்தது. 'தமிழில் வணிக சமூக உறவுகள் நெருக்கடியைச் சந்திக்க, வேளாண்மைச் சமூகம் தோற்றம் பெறும் காலத்திய ஒரு சிந்தனையாகவும் இது இருக்கமுடியும். எல்லாம் சூன்யம் என்ற ஒரு கோட்பாட்டோடு ஒரு வேளாண்மைச் சமூகம் நிலை கொள்ளுவது சாத்தியமில்லை என்று கொள்வோமெனில், உலகைச் சரியாக அறிந்து உணவு உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கிய ஒரு மக்களின் மெய்யியலாக அது இருக்கமுடியும்' என்று ந. முத்துமோகன் (*மணிமேகலை: மெய்யியல் விவாதங்களும் காலச்சூழலும்* 2012 டிசம்பர்18) கட்டுரையில் முடிவுக்கு வருகிறார். எனவே, வாணிகரின் இச்சமய அரசியலை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

## *ஆய்வு முன்னோடி*

தமிழ் இலக்கியங்களில் காப்பியங்கள் குறித்த ஆய்வுகள் அதிகம் இடம்பெற்றுள்ளன. மணிமேகலை காப்பியம் குறித்த ஆய்வுகள், காதை மாந்தர்கள், ஓர் ஆய்வு, வினைக்கோட்பாடு, பௌத்தம் என்று பல்வேறு நடைபெற்றுள்ளன. இருப்பினும் இலக்கியங்களில் கதாப்பாத்திரங்களின் இருப்பு, கதாப்பாத்திர கட்டமைப்புகளுக்கான சமூக அரசியல், படைப்பாளர்க்கான சமூக நெருக்கடி என்ற முறையில் ஒரு சில ஆய்வுகளே வந்துள்ளன.

ந. முத்துமோகன், மணிமேகலையில் மெய்யியல் விவாதங்களும் காலச்சூழலும் (2012 டிசம்பர் 18) nmuthumohan வலைப்பக்கத்தில் ஆய்வுக்கட்டுரை வெளியானது. இவ்வாய்வுக்கட்டுரை மணிமேகலையில் காணலாகும் மெய்யியல் விவாதங்களை சமூகப்பின்புலத்தில் மார்க்கிசிய ஆய்வுமுறையில் ஆராயப்பட்டது. வணிக சமூகம் நெருக்கடி சந்திக்கின்ற போது வேளாண்மை சமூகம் அதாவது உற்பத்தி சமூகம் தோன்றியிருக்க வேண்டும் என்பதாக இவ்வாய்வின் முடிபு அமையப்பெறுகின்றன.

ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் என்ற நூலில் இலக்கியங்களை கருத்தியல் அடிப்படையில் வகைமைப் படுத்தி எழுதியதாகும். இந்நூலில் மணிமேகலை தத்துவநெறிக்காலம் என்ற பகுதியில் விளக்கப்படுகிறது. தத்துவப் பின்புலங்கள் எவ்வாறு இலக்கியங்களை தகவமைத்துக் கொண்டன என்பதிற்கான காரணங்களை இந்நூலின் ஆய்வுப் போக்காக அமையப் பெற்றன.

Saravanajothi, S. (2020), *Ethic literature and tradition of thinnai theory*, என்ற கட்டுரையில் வைதீகம், சமணம், பௌத்தம் சமயம் சார்ந்த எழுத்தாளர் நூல்களில் அற கோட்பாடுகள் சமயப்பின்புலத்தில் தோன்றின. என்ற கருத்தியல் முன்வைக்கப் படுகிறது.

மணிமேகலை குறித்து இவ் மூன்று ஆய்வுகளும் சமூகப் பின்புலத்திலும் கருத்தியல் பின்புலத்திலும் ஆய்வு செய்யப்பட்டன. ஆ. வேலுப்பிள்ளை ஆய்வில், தத்துவங்களுக்கும் இலக்கியங்களுக்கும் உள்ள உறவுகள் குறித்து ஆராயப்பட்டன. படைப்பாளர் கதாப்பாத்திரங்களைக் கட்டமைப்பதில் சமூக அரசியல் ஏதும் உள்ளனவா என்று ஆராயப்படவில்லை. ந. முத்துமோகன் ஆய்வில், மணிமேகலையில் காணலாகும் மெய்யியல் உற்பத்தி சமூக உருவாக்கம் என்று விளக்க முயன்றுள்ளார். சமயங்களும் சமூக உருவாக்கமும் என்ற ஆய்வை முன்நிறுத்துகிறார். *Ethic literature and tradition of thinnai theory* என்ற கட்டுரை அற கோட்பாட்டு உருவாக்கத்தில் சமய இலக்கியங்கள்

ஆளுமை செலுத்துகின்றன என்ற கருத்தை முன்வைக்கின்றன. ஆனால் பௌத்த சமயம் சமூகத்தில் ஆதிக்கம் பெறுவதற்கு இலக்கியங்கள் கட்டிய அரசியல் எடுத்துரைக்கப்படவில்லை. எனவே, ஆய்வாளர் காதாப்பாத்திரங்களை உருவாக்குவதில் படைபாளர்க்கான சமூக அரசியல், சமூக அரசியலில் இயங்குகின்ற படைபாளர்கள் கட்டமைக்கின்ற சமய தத்துவ அரசியலை ஆய்வதாக இவ்வாய்வு அமையப்பெறுகின்றன.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்கு தேவையான நூல்கள், கட்டுரைகள், தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. தரவுகள் முழுமையாக சேகரிக்கப்பட்டு நிரல் படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. ஆய்வு முன்னோடிகளின் கருத்தியல் முழுமையாக உள்வாங்கப்பட்டு இவற்றிற்கு அடுத்த தளத்திற்கு எடுத்துச் செல்லும் விதமாக இவ்வாய்வு அமையப் பெறுற்றுள்ளன.

## தமிழகத்தில் பௌத்தம் தோற்றம்

தமிழகத்தில் அசோகர் காலத்தில் பௌத்த மதம் சிறப்புற்று விளங்கியதைக் கல்வெட்டுச் செய்திகள் நமக்கு உணர்த்துகின்றன. இக்காலத்தில் அசோகரது மகன் மகேந்திரர், மகள் சங்கமித்திரை இருவரும் இலங்கையில் பௌத்தத்தைப் பரப்பினர் என்று தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (*உலக நாகரிகத்தில் தமிழரின் பங்கு*, 1986., ப.93) குறிப்பிடுகிறார். மேலும், 'பௌத்த மதம் இந்நாடுகள் மட்டுமின்றி, பர்மா, மலேசியா, வியட்நாம், சாவகம் முதலிய கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் பரவியது என்று சோ. ந.கந்தசாமி (*பௌத்தம்*, 1992., ப.21) குறிப்பிடுகிறார். இவ்வகையில் பௌத்தம் உலக நாடுகளில் பல இடங்களில் பரவியிருந்தது. இந்நிலையில் தமிழகத்தில் வாணிகம் செய்த வாணிகர்கள் பௌத்த அடியார்களைத் தம் வழிபாட்டுக் கடவுளர்களாக ஏற்று வழிப்பட்டனர். இதனைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலைக் காப்பியத்தின் வழி நமக்கு உணர்த்துகிறார். இவ்வாணிகர்கள் ஏன் பௌத்தத்தை வழிபட்டனர் என்ற கேள்வியை எழுப்பின் அதற்கு விடை ஒன்றுதான். எப்படி அரசருடன் உறவைத் தகவமைத்தார்களோ, அது போலத்தான் பௌத்த மதத்தையும் உள்வாங்கிக் கொண்டனர். ஆனால், வாணிகர்கள் பௌத்தத்தை ஒருபடி மேலே எடுத்துச் சென்று அரச சமூகத்தைக் கூடப் பயமுறுத்தும் வகையில் தம் மதத்தை நிறுவ முயன்றனர். இவ்வரலாற்றை மணிமேகலைப் பிரதியில் உதயகுமாரன் கொலை நிகழ்வில் பதிவு செய்துள்ளதைக் காணலாம். இதில் வாணிகர்களின் பௌத்த அரசியல் புலப்படும்.

## மணிமேகலை காப்பியத்தில் பௌத்த மதக் கருத்துக்கள்

பௌத்த மதத்தில் நான்கு மேன்மை மிகு உண்மைகள் குறிப்பிடுகிறன. துன்பம் நிலையானது, துன்பத்திற்குக் காரணம் ஆசை, ஆசையை ஒழித்தல், எண்வகை வழிகள் (அட்டசீலம்) என நான்கு உண்மைகள் குறிப்பிடப்படுகின்றன. நல்ல நம்பிக்கை, நல்ல எண்ணம், நல்ல மொழி, நற்செய்கை, நல்வாழ்க்கை, நல்ல முயற்சி, நற்காட்சி, நல் தியானம் என்ற எட்டு வழிகள் முதன்மையான கொள்கைகள் ஆகும். பௌத்தம் மதக் கொள்கைகள் நான்கு உண்மைகள், அட்டசீலம் என்று சொல்லக்கூடிய எண்வகை வழிகள் முதன்மையானதாகும். The four Noble truths are very important aspect of the teachings of the Buddha. என்று (*Fundamentals of Buddhism*, 1984. pg.28) Dr.peter D Santina, என்பவர் சிங்கப்பூர் புத்த மத கல்வி அறக்கட்டளை மூலம் கூறும் கருத்துக்கள் பௌத்த மதத்தின் அடிப்படைத்தன்மைகள் ஆகும். இகருத்தியல்களை அடிப்படையாகக் கொண்டு மணிமேகலையின் காணலாகும் பௌத்த மதக் கருத்தினைப், பசியொழிப்பு, பரத்தையொழிப்பு, மது ஒழிப்பு, சிறை ஒழிப்பு, சாதி ஒழிப்பு என்று வகைப்படுத்தலாம்.

மணிமேகலை விழாவறை காதையில் இருபத்தெட்டு நாள் நடைபெறும் இந்திர விழா பற்றி கூறுகையில், 'பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி' (மணிமேகலை,1920) என்று கூறுவதன் மூலம் பசி ஒழிப்பு முதன்மையானதாக கருதப்படுகிறது. இந்திர விழாவில் நாட்டியமாடுவதற்கு மாதவியும் வரவில்லை, மணிமேகலையும் வரவில்லை என்று சித்தராபதி வயந்த மாலையிடம் கூறுகிறாள். இதற்கு மாதவி,

மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்

(மணிமேகலை ஊர் அலர் உரைத்தகாதை-54-57)

என்ற வரிகளின் வழி தன்னுடைய பிறப்பு இழிவானது என்று கூறி பரத்தையர் சமூக ஒழிப்புக்கு குரல் கொடுக்கிறாள். மேலும் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றுகிறாள். நிலையாமை என்பதை யாக்கை, செல்வம், இளமை என்ற மூன்று கருத்தியல்களை அழுத்தமாக கூறும் காப்பியம். பௌத்த கருத்தியல்களை ஒவ்வொரு கதாப்பாத்திரங்களின் வழியும் அறிவுறுத்தப் படுகிறது. குறிப்பாக மனிமேகலை காதாப்பாத்திரம் எடுத்துரைப்பியல் முறையி சீத்தலைச் சாத்தனார் புத்த பிக்குவாக கட்டமைக்கிறார். மணிமேகலையின் காதல் உணர்வுகள் பௌத்த துறவி என்பதால் மறுக்கப்படுகிறது. மணிமேகலைக்கு ஏற்படும் காதல் உணர்வுக்கு முற்பிறப்பு காராணத்தினைக் கூறி கதை

நகர்த்தப்படுகிறது. இவையெல்லாம் சமூகத்திற்குப் பௌத்த சிந்தனை மரபினை தெளிவாக புலப்படுத்துகின்ற காப்பியம்.

### *சாத்தனார் கண்ட மன்னர் சமூகம் அரசியல்*

காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து தெற்கே முப்பது யோசனை தூரத்தில் மணிபல்லவத் துறைமுகம் இருந்தது (மணிமேகலை, 6.211-213). பாண்டிய நாட்டுக் கப்பல் வாணிகர், சாவகத் தீவுகளுக்கு வாணிகத்தின் பொருட்டு கடலில் சென்றபோது இடை வழியில் மணிபல்லவத் துறையில் தங்கிச் சென்றார்கள் (மணிமேகலை,14.79-84). மணிமேகலையைப் பௌத்தம் தத்தெடுத்த இத்தீவின் வழியாக வாணிகர்கள் பயணம் செய்தனர் என்பதை அறிய முடிகிறது. மயிலை சீனி வேங்கடசாமி,'இலங்கையின் வடபகுதியாகிய இப்போதைய யாழ்ப்பாண தேசம் அக்காலத்தில் நாகநாடு என்று பெயர் பெற்றிருந்தது' (*பழங்காலத் தமிழர் வாணிகம்*, ப.113) என்று குறிப்பிடுகிறார். 'அந்த நாக நாட்டை ஆண்ட அரசன் வளைவாணன் என்னும் நாகுல மன்னன் மகள் 'பீலிவளை' என்பவள் மணிபல்லவத் துறையிலிருந்து புறப்பட்டு காவிரிப்பூம்பட்டினத்தின் கடற்கரைப் பகுதியில் வந்து தங்கியிருந்தாள். அப்போது அப்பட்டினத்தில் இருந்த வடிவேற்கிள்ளி என்னும் சோழ மன்னன் அவளுடன் உறவு கொண்டான். சில காலங்கழித்து அவள் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்து மணிபல்லவத் தீவில் தங்கியிருந்த கம்பலச் செட்டி என்னும் கப்பல் வாணிகனிடம் குழந்தையைக் கொடுத்து அனுப்பினாள். ஆனால், இடைக்கடலில் கப்பல் கவிழ்ந்து குழந்தை இறந்து போயிற்று (மணிமேகலை, 25.178-92). இதனால், சோர்வுற்ற மன்னன் தன் குழந்தையைத் தேடுவதில் காலம்; கழித்து இந்திரவிழா நடத்துவதை மறந்தான். ஆகையால், அந்நாட்டில் கொடிய பஞ்சம் பரவியது. இதனை நீக்கும் பொருட்டு பௌத்தத் துறவியான மணிமேகலை பசிப்பிணியைப் போக்கி நாட்டை வளம்பெறச் செய்தாள் என்ற கருத்தியலைக் காணமுடிகிறது. இந்நிலையில் கூல வாணிகர் குறிப்பிடும், பௌத்தம் தோன்றிய காரணத்தை அறிந்தால் வாணிகரின் பௌத்த அரசியல் நமக்குப் புலப்படும். 'புத்தர் அவதரிக்கும் முன் உலகில் உள்ள உயிர்கள் யாவும் உணர்வு குலைந்திருந்தன. மக்களின் செவிகள் அறக் கருத்துக்களைக் கேளாது இருந்தனர். அறிவு வறுமையடைந்திருந்தது. ஒளியில்லாமல் உயிர்கள் தடுமாறின. இவ்வாறு உலகில் அறிவும் அறமும் ஒளியும் மங்கிய காலத்தில் உயிர்களை உய்விக்க புத்தர் என்ற இளவள ஞாயிறு தோன்றினார் (மணிமேகலை,10.7-16) என்கிறார். இங்கே, மன்னனின் தகாத காதல் உறவை அறிவு மயங்கியதாகவும், நாட்டிற்குப் பணிவிடை செய்யாது பஞ்சம் ஏற்படுத்தியதை அறமின்மையாகவும் இப்பசியைப் போக்கிய பௌத்தர் ஒளிகொடுத்ததாகவும் கூல வாணிகர் குறிப்பிடுகிறார். இதன் மூலம் மன்னர்கள் அறமும் அறிவும் இல்லாத அற்பர்கள் என்ற கருத்தியல் முன்வைக்கப்படுகிறது.

### *உதயகுமாரன் - மணிமேகலை உறவு*

கூல வாணிகரின் காப்பியப் படைப்பில் பிறப்புக் கோட்பாடு ஒரு பெரும் பரப்பைப் பிடித்துள்ளது. இதனை அக்காலச் சமூக அரசியலோடு பொருத்தித் தனி ஆய்வாக நிகழ்த்தப்பட வேண்டும். ஆனால், இவ்வாய்வு பகுத்தறிவுத் தன்மையை முன்வைத்து, நிகழ்கால எதார்த்தக் கருத்தியல் பின்புலத்தில் ஆராயப்படுகிறது. கார்த்திகேசு சிவத்தம்பி, 'இலக்கியத்தின் பணி, இந்த சமூக உறவின் உண்மைகளைச், சமூக இருப்புக்கும் மனித அசைவியக்கத்துக்குமுள்ள உறவுகளைத் தெளிவுப்படுத்துவதே, (உங்கள் நூலகம், ஜூலை-ஆகஸ்ட், 2006., ரியலிசம், சோசலஸ்ட் ரியலிசம், மார்க்சியம், ப.14.) ஆகும் என்று குறிப்பிடுகிறார். ஆகையால், இதன் பின்னணியில் காப்பிய மாந்தர்களின் உறவுகள் ஆராயப்படுகின்றன.

உதயகுமாரன் காஞ்சனன் என்பவனால் வெட்டப்பட்டுக் கிடக்கிறான். அப்போது மணிமேகலை,

உவவன மருங்கில் நின்பால் உள்ளம்
தவிர்விலேன்................................. (மணிமேகலை, 21.13.14)

................... வெய்துயிர்த்துப் புலம்பி,
அழுதவள் ஏங்கி அயாவுயிர்த்து கெழுதலும (மணிமேகலை, 21.26-27)

என்று கூறி அழுகிறாள். இப்பாடலின் வழியாக, உவவனத்திலே என் உள்ளத்தை உன்னிடம் தந்தேன் என்று அழுது புலம்புகிறாள். இத்தகையக் கொடிய துக்கம் பௌத்தத் துறவிக்கு ஏன் ஏற்படவேண்டும்? இவ்விடத்தில் காப்பிய ஆசிரியர் தன்னையும் மறந்து அவளும் ஒரு பெண், அவளுக்கும் உணர்ச்சிகள் உண்டு என்பதை வெளிப்படுத்துகிறார். அடுத்த வினாடியே கூல வாணிகர் பௌத்தத்தில் ஏறி நின்று மணிமேகலையை எச்சரிக்கிறார்.

செல்லல் செல்லல்! சேயரி நெடுங்கண்
அல்லியந் தாரோன் தன்பாற் செல்லல (மணிமேகலை, 21.28-29)

இவ்வரிகளில், நீ அவனிடம் செல்லாதே. நீ வணங்கும் இறைவனை நினைத்துப் பார் என்கிறார். உன் மதத்தை மறந்து விடாதே என்று கூறுவதற்குப் பதிலாக இலைமறை காயாக முற்பிறப்பு என்று கூறி விடுகிறார். இவ்வாறு உதயகுமாரன் - மணிமேகலை காதல் பௌத்த மதத்தால் மூடி மறைக்கப்படுகிறது.

## *உதயகுமாரன் கொலையின் அரசியல் பின்புலம்*

காவிரிப் பூம்பட்டினத்தில் ஆட்சி செய்த வடிவேற்கிள்ளி என்ற சோழ மன்னனின் புதல்வன் மிக்க போர்திறம் அறிந்தவன் (மணிமேகலை, 2.26-50). இத்தகைய வலிமை மிக்க அரசனிடம் இருந்து வாணிகர்கள் தம் இலாபத்தின் மையமான பௌத்தத்தையும் பௌத்தத் துறவிகளையும் காக்க வேண்டிய ஒரு பெரும் நெருக்கடி உண்டானது. இத்தகைய சூழலில் கூல வாணிகர் இலக்கியத்தைக் கையில் எடுத்துக் கொண்டார். ஏனெனில் சங்ககாலத்தில் அரசரே புலவராக இருந்த வரலாறு தெரியும். ஆகையால், இலக்கியத்தின் வாயிலாக மன்னர் சமூகத்திற்கு எச்சரிக்கைக் குரல் கொடுக்க விரும்பியிருக்கிறார்.

மணிபல்லவத் தீவில் தீவதிலகை என்ற தெய்வம் மணிமேகலைக்கு வரும் இன்னல்களைத் தவிர்க்க காயசண்டிகையின் உருவம் எடுப்பதற்கு வழிகாட்டியது. ஆனால், அப்பெண்ணின் கணவன் யார் என்பதைச் சொல்ல மறந்தது ஏன் என்று புரியவில்லை. அடுத்ததாக, காஞ்சனன் காயசண்டிகையின் உருவில் இருக்கும் மணிமேகலையைக் கண்டதும்,

> ஏந்திள வனமுலை..........
> மாந்தர் பசிநோய் மாற்றக் கண்டாங்கு (மணிமேகலை,20.31-32)

என்று அவள் அழகை விளிக்கிறான். பின்னர்தான் அவள் வினையைச் சுட்டுகிறான். இத்தகைய அழகு உடையவள் மீது உதயகுமாரனுக்கு காதல் வருவது தவறேதுமில்லை. இதை அக்காலச் சமூகத்தின் ஆணியப் பார்வையாகக் கூட எடுத்துக் கொள்ளலாம். இப்படி அழகுடைய பெண்ணைக் கண்ட காஞ்சனன் ஆனைத் தீநோய்யாகிய மிகப் பெரும் பசியைப் போக்கி வானகத் தேவர்கள் அருளினார்கள் என்று பழைய உறவுடன் பேசத் தொடங்கினான் (மணிமேகலை, 20.35-38). எட்டு சமய நெறிகளைக் கற்றுணரக் கூடிய பெண், சமுதாயத்தில் ஏனைய மனிதர்களோடு எப்படி உறவாட வேண்டும் என்றோ, தான் எடுத்திருக்கும் வடிவத்தை மையப்படுத்திய வார்த்தைகளை ஒருவன் புலம்புகிறானே அதற்க்கான காரணம் என்ன என்றோ உணர முடியாத ஒரு அற்பப் பெண் பாத்திரமாக மணிமேகலையைக், கூல வாணிகர் படைத்துக் காட்டுகிறார். காப்பியம் முழுமையும் அறிவும் ஆற்றலும் உடையவளாகக் காட்டப்பெறும் மணிமேகலையை உதயகுமாரன் கொலை நிகழ்வதற்குச் சற்று முன்பாக கூலவாணிகர் அறிவிழக்கச் செய்கிறார். இவ்விடத்தில் கூலவாணிகரின் சூழ்ச்சியைக் கண்டறிய முடிகிறது. மேலும், கொலைக்கான அரசியலைக் காப்பியத்தில் நகர்த்துகிறார். காஞ்சனனைப் புறம் தள்ளிவிட்ட மணிமேகலை உதயகுமாரனிடம் சென்று ஒரு மூதாட்டியைக் காண்பித்து யாக்கை நிலையாமையைக் கூறுவதாக ஓர் உரையாடலைக் கூல வாணிகார் நிகழ்த்திக் காட்டுகிறார். அதன் வழியாக, காஞ்சனன் உதயகுமாரன் இடையே பகையை வளர்க்கிறார். இப்பகை நெடிது நீண்டு, காஞ்சனனின் வன்மத்தால் உதயகுமாரன் கொலை செய்யப்படுகிறான் என்பதாக, கூல வாணிகர் தமது சமய அரசியலை மறைக்க முற்படுகிறார். அக்காலச் சமூகத்தில் மன்னன் தான் விரும்பிய பெண்ணை மணப்பதற்குப் போர் செய்த வரலாறு நம் மரபிலே உண்டு (மகட்பாற்காஞ்சி). இத்தகைய வீரம் செறிந்த மன்னர் சமூகத்திடமிருந்து வாணிகர் சமூகம் (தன் சமயத்தைப் பாதுகாக்கும் பொருட்டு) நடத்திய அறிவு அரசியலை மணிமேகலை காப்பியம் உணர்த்துகிறது.

## *முடிவுரை*

கோவலன் இறந்தவுடன் மாசாத்துவான், மாதவி இவர்கள் பௌத்த மதத்தைத் தழுவ வேண்டியக் காரணத்தினைச் சிலப்பதிகாரத்தின் முடிவிலே கூறுவதன் மூலம், வாணிகர்களின் சமய அரசியலைப் புரிந்து கொள்ள முடிகிறது. இது வாணிகர்களுடைய சமய அரசியலின் ஆரம்ப நிலை எனலாம். காதாப்பாத்திரங்களை உருவாக்குவதில் படைபாளர்க்கான சமூக அரசியல், சமூக அரசியலில் இயங்குகின்ற படைபாளர்கள் கட்டமைக்கின்ற சமய தத்துவ அரசியலைப் புரிந்து கொள்ள முடிகின்றன. பரத்தையர் குலப்பெண்ணான மாதவியின் மகள் மணிமேகலையின் மூலம் பௌத்த மதத்தை வளர்க்க வேண்டிய அவசியத்தின் மூலம் கதாப்பாத்திர கட்டமைப்பு அரசியலைப் புரிந்துகொள்ள முடிகிறது. அக்கால சமூகத்தில் பரத்தையர் இனம் என்பது ஆண் இனவர்க்கத்திற்கு இன்பம் அளிக்கும் தொழிலைச் செய்து கொண்டிருப்பவர்கள். அத்தகைய பெண்களும் பௌத்தத் துறவிகளாக இருந்தால் மன்னர் சமூகம் பணிந்து வணங்க வேண்டும் என்பது கூல வாணிகனின் திண்மையான கருத்து என்பதை உணர முடிகின்றது. இத்தகையச் சமய அரசியல் மூலம் மன்னர் சமூகத்திற்கு முன்பாக ஓர் எதிர்மை வாதத்தை முன் வைக்கிறார். சமயங்களுக்குப் பின்னால் மன்னர்கள் இயங்க வேண்டும் என்பதைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் கதைக் கட்டமைப்பு வெளிப்படுத்துகிறன. இதன் மூலம் நிகழ் காலத்தில் காணலாகும் அரசியலுக்கும் சமயங்களுக்கும் உள்ள உறவை மதிப்பிடுவதற்கு இவ்வாய்வு துணையாக அமையும்.

## REFERENCE

[1] Adiyaarku nallar, (1920), ***silabbathigaram mulamum uraiyum,*** Chennai: Kamarsiyal assukudam. http://www.tamilvu.org/library/nationalized/scholars/pdf/religion/charvaartta_ch irpakin_taamand_i.pdf.

[2] Ilamporanar, (1986), ***Tholkappiyam porulathigaram.,*** Chennai: kalaga pabulication.

[3] Kanagasabi., v., Appaththurai., ka., (1962) ***Ayirththi ennuru anduku murptta thamilagam.,*** Colombo apothecaries' co.Ltd.
[4] Kanthasami., so.,na., ***pavththam,*** (1992) Chennai: Manivasakar pathipagam.
[5] Karthikesu sivaththambi., (2006)., ***Ungal nuulagam***, Chennai.
[6] Menachisundaranar., They. Po., (16.06.2020) ***Thamil nattil pavththam***, www.thamizhkkuil.net., http://thamizmandram.blogspot.com/, https://groups.google.com/forum/#!topic/mintamil/SqVZ_um6pnQ.
[7] Menachisundaranar., They. Po., (1982)., ***Ulaga nakarigaththil thamilarin bangu.,*** Madurai: sarvothiya ilakkiya pannai.

[8] Muthumohan. N., (2018)., *https://nmuthumohan.wordpress.com/.,* ***nmuthumohan.wordpress.com/2012/12/18/மணிமேகலை-மெய்யியல்-விவ/.***
[9] Santina Dr. peter D., (1984), ***Fundamentals of Buddhism***, http://www.buddhanet.net/pdf_file/fundbud1.pdf

[10] Saravanajothi, S. (2020), ***Ethic literature and tradition of thinnai theory,***Journal Of Tamil Studies, Vo 1 No1., https://ejournal.upsi.edu.my/index.php/JTS/index.
[11] Saravanajothi, S. (2020), **Construction of Ethics in Cirupancamulam,**International Journal of Research and Analytical Reviews(IJRAR), Volume 7, Issues 2., www.ijrar.org.
[12] Venkadasami., mayilai., sini.,(2007)., ***Balangala thamilar vanigam,*** Chennai: naam thamilar pathippagam.